## மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆ.ராசா அவர்கள் முன்னிலையில், அவிநாசி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நம்பியாம்பாளையம் ஒருங்கிணைந்த அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம், தண்டுக்காரன்பாளையம், ஆலத்தூர் துணை சுகாதார நிலையங்களை திறந்து வைத்து, சேவூர் சித்த மருத்துவமனை அமைக்கும் பணி என மொத்தம் ரூ.2.26 கோடி மதிப்பீட்டில் துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆ.ராசா அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இன்று (25.08.2021) திருப்பூர் மாவட்டம், அவிநாசி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நம்பியாம்பாளையம் ஒருங்கிணைந்த அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம், தண்டுக்காரன்பாளையம், ஆலத்தூர் ஆகிய துணை சுகாதார நிலையங்களை திறந்து வைத்து, சேவூர் சித்த மருத்துவமனை அமைக்கும் பணி என மொத்தம் ரூ.2.26 கோடி மதிப்பீட்டில் துவக்கி வைத்தார்கள்.

## மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, திருப்பூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் மருத்துவத்துறை ஏனைய துறைகள் ஒருங்கிணைந்து மேற்கொண்ட தீவிர கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மூலம் கொரோனா தொற்று படிப்படியாக குறைந்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் **”மக்களை தேடி மருத்துவம்”** திட்டத்தினை துவக்கி வைத்தார்கள். மருத்துவர்கள் நோயாளிகளின் இல்லத்திற்கே சென்று தேவையான சிகிச்சை அளிக்கும் சிறப்பான திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் திருப்பூர் மாவட்டத்தில், உயர் இரத்த அழுத்த நோயாளிகள் 2,499 நீரிழிவு நோயாளிகள்

1,111 உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயாளிகள் 982, நோய் தடுப்பு பராமரிப்பு 83, இயன் முறை மருத்துவம்-75 நோயாளிகள் பயனடைந்துள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா நோய் பெருந்தொற்று காலத்தில் தமிழக மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கின்ற வகையிலே, தமிழகத்திலுள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண உதவித்தொகை இரண்டு தவணையாக 2 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 4 ஆயிரம் வழங்கும் திட்டத்தையும், 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். அதே போல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேளாண்பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகவும், வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்காகவும் விவசாயிகளின் எந்தவொரு பிரச்சனையாக இருந்தாலும் அதற்குத் தீர்வு காண்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீர்ப்பாசனத்துறை எனும் ஒரு புதிய துறையை உருவாக்கி அதற்கு அனுபவம் வாய்ந்த மூத்த அமைச்சரை நியமித்துள்ளார்கள்.

அதே போல் நகர்ப்புற பேருந்துகளில் மகளிர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு இலவசமாக பயணம் மேற்கொள்வதற்காக இலவச பேருந்து திட்டத்தினை அறிவித்து செயல்படுத்தியுள்ளார்கள் என மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.

அந்த வகையில், இன்றைய தினம், அவிநாசி ஊராட்சி ஒன்றியம், நம்பியாம்பாளையத்தில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் புதிய ஒருங்கிணைந்த அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம், தண்டுக்காரன்பாளையத்தில் ரூ.25.00 இலட்சம் மதிப்பில் துணை சுகாதார நிலையம் மற்றும் ஆலத்தூரில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையத்தினை திறந்து வைத்தும், அவிநாசி பொது மருத்துவமனையில் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் நன்கொடையாளர்கள் வழங்கிய குளிர்சாதன இயந்திரங்கள், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கிய மின்னாக்கி மற்றும் ஆலத்தூர், துலக்கமுத்தூர், நம்பியாம்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கிய மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றை மருத்துவமனை பயன்பாட்டிற்கு வழங்கி, சேவூர் சுகாதார

*நிலையத்தில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் சித்த மருத்துவமனை கட்டம் அமைக்கும் பணி என மொத்தம் ரூ.2.26 கோடி மதிப்பீட்டில் துவக்கி வைக்கப்பட்டுள்ளதென மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில், இணைஇயக்குநர் (மருத்துவபணிகள்) மரு.பாக்கியலட்சுமி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்), மரு.ஜெகதீஷ்குமார், வட்டார மருத்துவ அலுவலர் திரு.சக்திவேல், பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்) உதவி செயற்பொறியாளர் திரு.சுரேஷ்குமார், உதவி பொறியாளர் திரு.கோவிந்தராஜ் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.***